8 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
ஜார்ஜ் டவுண், சென்னை

முன்னிலை திருமதி.TSP,ஜெயசுதா,M.L.,
8 வது பெருநகர குற்றவியல் நடுவர்

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 ஆம் நாள் புதன்கிழமை

C.C.No.1270/2022

CNR No. TNCHOB–014293–2022

இந்த வழக்கு 09.11.2022 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் உதவி அரசு வழக்கறிஞர் அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.செய்யது பர்வீஷ் அவர்களும் முன்னிலையாகி இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பார்வையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீ ர் ப் பு ரை

| | |
|---|---|
| அ) வழக்கின் வரிசை எண் | சி.சி.எண். 1270/2022 |
| ஆ) குற்றம் செய்யப்பட்ட நாள் | 27.01.2015 |
| இ) முறையிடுபவர் | காவல் ஆய்வாளர், (சட்டம் மற்றும் ஒழுங்கு), சி–3 ஏழுகிணறு காவல் நிலையம், சென்னை. குற்றஎண். 267/2015 |
| ஈ) எதிரியின் பெயரும், பெற்றோர் விவரமும், எதிரியின் குடியிருப்பிடமும் | முத்து, ஆ/வ.32, த/பெ.சுப்புராயன், எண்.51–19 ஏ உட்வார்பு 2 வது லேன், வால்டாக்ஸ் ரோடு, சென்னை–79. |

உ) முறையீடு செய்யப்பட்ட குற்றம்

கடந்த 28.01.2015ம் தேதி இரவு சுமார் 12.00 மணியளவில் எதிரி முத்து என்பவர் குற்றமுறு செயலை செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் சட்ட விரோதமாக பொதுமக்களுக்கு சொந்தமான தேவி கருமாரியம்மன் ஆலயத்தின் முன் பக்கம் இருந்த சூலாயுதத்தை சேதப்படுத்தியதைப் பார்த்த 1 முதல் 4

சாட்சிகள் கேட்க சென்றபோது எதிரி அவர்களைப் பார்த்து ஓத்தா தேவடியா பசங்களா என அறுவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியும், சாட்சி–4 ரஜேஷ் என்பவரை கையால் அடித்து வலியை ஏற்படுத்தியும், ஆலயத்தின் பொது சொத்து ரூ.500/– வரை சேதாரம் ஏற்படுத்தியுள்ளார் என்பதால் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 352, 427 ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அரசுத் தரப்பில் வழக்கு முன்னிடப்பட்டுள்ளது.

ஊ) எதிரியின் வாதுரையும் அவரது விசாரணையும் – குற்றவாளி அல்ல

ஏ) முடிவான ஆணை–

முடிவில் இந்நீதிமன்றம் எதிரியை இதச பிரிவுகள் 427, 352 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானிக்கின்றது.

ஏ) அத்தகைய தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் 09.11.2022

ஐ) அத்தீர்ப்புரைக்கான காரணங்கள் கொண்ட சுருக்கமான ஒரு உரை

1. புகார்தாரரான ராஜேஸ்வரி என்பவர் எண்.15 ஏ, உட்வார்ப் 2 வது கேட், 2 வது தெரு, வால்டாக்ஸ்ரோடு சென்னை–79 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இரவு சுமார் 12 மணியளவில் அதே இடத்தில் வசிக்கும் திரு.முத்து என்பவர் தாங்கள் கட்டி வைத்திருந்த கருமாரியம்மன் கோவிலின் வெளியே வைத்திருந்த சூலத்தை எடுத்து உடைத்தது மட்டுமல்லாமல் தங்களையும் தகாத வார்த்தைகளால் திட்டி அங்கிருக்கும் இளைஞர்களை அடித்தவரை கேட்டதற்கு நான் ஒரு அரசியல் பிரமுகர் என்னைப் பார்த்தால் பயப்பட வேண்டும் எழுந்து நிற்கவேண்டும் என்றும், முன்பு ஒருமுறை கோவிலில் உள்ள டியூப்லைட்டை உடைத்ததற்கு தாங்கள் எந்த புகாரும் தெரிவிக்காமல் குடிபோதையில் செய்ததாக

விட்டுவிட்டதாகவும், கட்சியில் இருப்பதை வைத்துக் கொண்டு மிகவும் ஆணவத்தில் ஆடும் அவரை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு அதசாஆ.1 புகார் கொடுத்துள்ளார்.

2. அந்த புகாரைப் பெற்றுக் கொண்ட சி–3 ஏழுகிணறு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர் திரு. குமார் என்பவர் புகார்தாரர் ராஜேஸ்வரி கொடுத்த எழுத்து மூலமான அதசாஆ.1 புகாரைப் பெற்று சி.எஸ்.எண்.57/2015 வழங்கி நிலைய குற்ற எண்.267/2015 இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் பிரிவு 3 TNPPDL ன் கீழ் அதசாஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் ஆதிமூலம் என்பவர் சம்பவயிடமான உட்வார்பு 2 வது கேட் தெரு, தேவி கருமாரியம்மன் ஆலயம் அருகில் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மேரி மற்றும் ரேவதி (விசாரிக்கப்படவில்லை) ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அதசாஆ.3 பார்வை மகஜர் மற்றும் அதசாஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் உயர் நீதி மன்றத்தில் முன் ஜாமின் பெற்ற காரணத்தால் கைது செய்யவில்லை. பின்னர் காவல் ஆய்வாளர் ஆதிமூலம் பணி மாறுதலில் சென்றதினால் அவருக்கு பின் வந்த காவல் ஆய்வாளர் உக்கிர பாண்டியன் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இறுதி கட்ட விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் பிரிவு 3 TNPPDL இருந்து பிரிவு மாற்றம் செய்து இதச பிரிவுகள் 294(பி), 352, 427 ன் கீழ் அதசாஆ.6 சட்டப்பிரிவு மாற்றலறிக்கை தயார் செய்தார். பின்னர் 07.03.2019 ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்தார். மேற்படி இறுதியறிக்கையை பரிசீலித்து இந்நீதிமன்றம்

கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பானை அனுப்பியது.

3. எதிரி ஆஜரான உடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் வழங்கி, வழக்காவணங்களை பரிசீலித்து எதிரிமீது இதச பிரிவுகள் 352, 427ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரியை வினவியபோது எதிரி அவற்றை மறுத்து வழக்கை நடத்த வேண்டும் என தெரிவித்தார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ. 1 முதல் 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 என்பவர் புகார்தாரராவார். அசா.2 என்பவர் காவல் நிலைய தற்போதைய விசாரணை அலுவலர். இவ்வழக்கில் அ.சா.1ன் மூலம் அதசாஆ.1 புகாரில் உள்ள கையெழுத்தும், அசா.2ன் மூலம் அதசாஆ.2 புகாரும், அதசாஆ.3 முதல் தகவல் அறிக்கையும், அதசாஆ.4 பார்வை மகஜர், அதசாஆ.5 மாதிரிவரைபடம், அதசாஆ.6 சட்டப்பிரிவு மாற்றலறிக்கை ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அசா.1 என்பவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது எண்.15ஏ, உட்வார்ப் 3வது தெரு, வால்டாக்ஸ் ரோடு, சென்னை என்ற முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருப்பதாகவும், எதிரியை தன் பகுதியில் வசிப்பதால் எப்போதாவது பார்ப்பதாகவும், தன் முன் காட்டப்படும் புகாரில் உள்ள அதசாஆ.1 கையெழுத்தை காவலர்கள் கேட்டதனால் போட்டு கொடுத்ததாகவும், எதற்கு கேட்டார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் இவரை பிறழ் சாட்சியாக அறிவித்துள்ளார்கள்.

6. இவ்வழக்கில் அசா.2 என்பவர் விசாரணை அலுவலர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் விசாரணையை பொறுத்து தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 313(1)ஆ கீழ் வினவும்போது எதிரி அவற்றை மறுத்து பொய் வழக்கு என தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

8. தற்போது இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதாகும்.

9. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கின் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட புகார்தாரர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டபடியாலும் மற்ற பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என அரசு தரப்பில் கைவிட்டு சி–3 காவல் நிலைய உதவி ஆய்வாளர் அசா.2 ஆக விசாரிக்கப்பட்டார். இவர் ஒருவரின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியை குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது. எனவே இந்நீதிமன்றம் இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவிற்கு வருகிறது.

முடிவில் இந்நீதிமன்றம் எதிரியை இதச பிரிவுகள் 352, 427 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவிற்கு வந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

வழக்கு சொத்து இல்லை.

என்னால் சுருக்கெழுத்துச் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தங்கள் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T S P JAYASUDHA
Digitally signed by T S P JAYASUDHA
Date: 2022.11.09 17:34:32 +0530

8 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ்டவுண், சென்னை

<u>பின் இணைப்பு</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1. – திருமதி. ராஜேஸ்வரி

அ.சா.2. – திருமதி.வித்யா (உதவி ஆய்வாளர்)

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அதசாஆ.1. | – | 28.01.2015 ம் தேதியிட்ட அசா.1 ன் புகாரில் உள்ள கையெழுத்து |
| அதசாஆ.2. | – | 28.01.2015 ம் தேதியிட்ட புகார் |
| அதசாஆ.3. | – | 02.02.2015 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அதசாஆ.4. | – | 02.02.2015 ம் தேதியிட்ட பார்வை மகஜர் |
| அதசாஆ.5. | – | 02.02.2015 ம் தேதியிட்ட மாதிரிவரைபடம் |
| அதசாஆ.6. | – | 20.02.2015 ம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாற்றலறிக்கை |

<u>சான்று பொருட்கள் – இல்லை</u>

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணம் </u> – இல்லை

T S P JAYASUDHA
Digitally signed by T S P JAYASUDHA
Date: 2022.11.09 17:34:46 +0530

8 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ்டவுண், சென்னை